**செய்தி வெளியீடு எண்: 329** **நாள்: 20.06.2013**

24.7.2013 அன்று பதவிக் காலம் முடிவுற்று ஓய்வு பெறும் 6 மாநிலங்களவை உறுப்பினர்களின் இடங்களை நிரப்புவதற்காக தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் மாநிலங்களவைத் தேர்தலில், 8 செல்லத்தக்க வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. வேட்பு மனுவை திரும்பப் பெற கடைசி நாள் இன்று (20.6.2013) பிற்பகல் 3.00 மணிவரை ஆகும். திரு. கு. தங்கமுத்து (அஇஅதிமுக உறுப்பினர்) தனது வேட்பு மனுவை 18.6.2013 அன்று திரும்பப் பெற்றுக்கொண்டார். கீழ்க்கண்ட 7 வேட்பாளர்கள் தேர்தல் களத்தில் உள்ளனர்:

| தொடர் எண் | வேட்பாளரின் பெயர் | வேட்பாளரின் முகவரி | சார்ந்துள்ள கட்சியின் பெயர் |
|---|---|---|---|
| 1. | திரு.கே.ஆர். அர்ஜுனன் | 271 / 182 கேத்தி கிராமம் மற்றும் அஞ்சல், நீலகிரி மாவட்டம் – 643 215 | அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் |
| 2. | திரு. ஏ.ஆர். இளங்கோவன் | 51 – பி பிளாக், இரண்டாம் தளம், தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய குடியிருப்பு, கிரீன் பார்க் அபார்ட்மெண்ட், ஓமலூர் சாலை, சேலம்–636 004. | தேசிய முற்போக்கு திராவிட கழகம் |
| 3. | டாக்டர் இரா. இலட்சுமணன் | 37 / ஏ, பணம்பட்டு ரோடு, விழுப்புரம் 605 602 விழுப்புரம் மாவட்டம் | அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் |
| 4. | திருமதி கனிமொழி | கதவு எண்.14, முதல் பிரதான சாலை, சி.ஐ.டி. காலனி, மயிலாப்பூர், சென்னை–600 004. | திராவிட முன்னேற்றக் கழகம் |
| 5.. | டாக்டர் வா. மைத்ரேயன் | 31 / 1 முதல் அவின்யூ, பெசன்ட் நகர், சென்னை 600 090 | அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் |
| 6. | திரு. த. ரத்தினவேல் | 40 / 12 கிரஸன்ட் நகர், முதல் தெரு, காஜாமலை பிரதான சாலை, திருச்சி–23 | அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் |
| 7. | திரு. டி. ராஜா | 19 / 43, தெற்கு போக் சாலை, தி.நகர், சென்னை 600 017. | இந்திய கம்யூனிஸ்ட் கட்சி |

ஆறு மாநிலங்களவை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க, சென்னை–9, தலைமைச் செயலக, பிரதான கட்டிடத்தின், தரை தளத்தில் அமைந்துள்ள சட்டமன்றக் குழுக்கள் கூடும் அறையில் 27.6.2013 (வியாழக்கிழமை) அன்று காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை வாக்குப்பதிவு நடைபெறும். அன்றையதினம் மாலை 5.00 மணியளவில் வாக்கு எண்ணிக்கை நடைபெற்று தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படும்.

அ.மு.பி. ஜமாலுதீன்,
தேர்தல் நடத்தும் அதிகாரி
மற்றும் செயலாளர்
சட்டமன்றப் பேரவைச் செயலகம்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**